# ஸ்காட்லாந்திலுள்ள தன்பால் உடலுறவுடைப் பெண்கள் (லெஸ்பியன்), ஓரினச்சேர்க்கையாளர், இருபாலினத்தவர் மற்றும் திருநங்கை (LGBT) அகதிகளுக்கான அறிவுரை

ஏப்ரல் 2011

LGBT – Tamil

நாங்கள் வேற்றுமையை மதிக்கிறோம் மேலும் அனைத்து தனிநபர்களையும் நடுநிலைமையுடனும், கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துகிறோம்.

துரதிருஷ்டவசமாக, சிலர் தங்களுடைய பாலியல் முறையினாலோ அல்லது அவர்கள் அடையாளப்படுத்தப்படும் பாலினம் காரணமாகவோ (பாலின அடையாளம்) பாகுபாடு மற்றும்/ அல்லது தொல்லையால் அவதிப்படுகின்றனர். நீங்கள் ஒரு தன்பால் உடலுறவுடைப் பெண் (லெஸ்பியன்), ஓரினச்சேர்க்கையாளர், இருபாலினத்தவர், அல்லது திருநங்கை (LGBT) என்பதால், அத்தகைய பாரபட்சம், தொல்லை அல்லது இடரால் துன்புற்றால் மேலும் இந்த அடிப்படையில் யு.கே-வில் புகலிடம் கோர விரும்பினால், நீங்கள் உதவி, ஆலோசனை அல்லது செய்திகளை எங்கு பெறலாம் என்கிற தகவல்களை இச்சிற்றேடு உங்களுக்கு அளிக்கிறது.

**1951 அகதிகள் சாசனம் கூறுவதாவது:**

> *'எவரேனும் ஒரு நபர் - இனம், மதம், நாட்டுரிமை, குறிப்பிட்டதோர் சமூகக்குழுவில் உறுப்புத்துவம் அல்லது அரசியல் கருத்து காரணமாக துன்புறுத்தப்படுவோம் என்கிற உறுதியான அச்சத்தின் காரணமாக அல்லது அந்நாட்டின் பாதுகாப்பைப் பெற முடியாதவராகவோ தன்னுடைய சொந்த நாட்டிற்கு வெளியே இருப்பவர்'*

சமீபகாலம் வரை யு.கே-வில் புகலிடம் கோரும்பொருட்டு, தன்பால் உடலுறவுடைப் பெண்கள் (லெஸ்பியன்), ஓரினச்சேர்க்கையாளர், இருபாலினத்தவர் அல்லது திருநங்கையர் (LGBT) ஆகியோர்களுக்கு மேற்கூறப்பட்டுள்ள கட்டளைவிதிகளோடு தாங்கள் பொருந்துபவர் என்பதை நிரூபிப்பது கடினமாக இருந்து வந்தது. ஜூலை 7, 2010 அன்று ஒருமனதான உச்ச நீதிமன்ற தீர்ப்பு (தீர்மானம்) – HJ (ஈரான்) மற்றும் HT (கேமரூன்) எதிர் உள்துறைச் செயலர் (2010) *UKSC* 31 - மக்கள் தமது பாலியல் முறையின் காரணமாக துன்புறுத்தலை அனுபவித்தால் அவர்கள் உள்துறை அலுவலகத்தினால் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியவர்கள் என்று கண்டறிந்தது. இத்தீர்மானம் திருநங்கையர் படும் துயரங்களை நேரடியாகக் கொணர்வதில்லை என்றாலும் உபயோகமாக இருக்கக்கூடும். யு.கே. உச்சநீதிமன்றத்தின் இணையதளத்தில் இத்தீர்ப்பின் முழுத் தகவல்கள் கிடைக்கின்றன.

http://www.supremecourt.gov.uk/docs/UKSC_2009_0054_Judgment.pdf

**உச்சநீதிமன்றத்தின் இத்தீர்ப்பு தன்பால் உடலுறவுடைப்பெண்கள் (லெஸ்பியன்), ஓரினச்சேர்க்கையாளர், இருபாலினத்தவர் மற்றும் திருநங்கையர்க்கு (LGBT) உணர்த்துவது என்ன?**

நீங்கள் உங்களது பாலியல் முறையினாலோ அல்லது நீங்கள் அடையாளம் காட்டப்படும் பாலினத்தின் (பாலின அடையாளம்) காரணமாகவோ பாதுகாப்பு கோருகிறீர்கள் என்றால், இப்பொழுது மேலும் ஒரு பயன் தரக்கூடிய தீர்ப்புவழிச் சட்டம் உங்களுக்கு உள்ளது. இந்த அடிப்படையில் புகலிடத்திற்கு விண்ணப்பிப்பதில் உள்ள தடைகள் நீக்கப்பட்டுவிட்டாலும், யு.கே-வில் உங்களுக்கு புகலிடம் நிச்சயமாக வழங்கப்படும் என ஆகாது என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமாகும்.

நீதிமன்றம் புகலிடம் கோரும் ஓரினச் சேர்க்கையாளர் மற்றும் தன்பால் உடலுறவுடை பெண்கள் (லெஸ்பியன்) ஆகியோர் தமது சொந்த நாட்டில் தங்களது பாலியல் முறையை மறைத்துக் கொண்டு, தொந்தரவுகளில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்க முடியாது என்று தீர்ப்பளித்தது. இத்தீர்மானம், நீங்கள் உங்களுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று நீங்கள் ஒரு தன்பால் உடலுறவுடைப் பெண், ஓரினச் சேர்க்கையாளர், இருபாலினத்தவர் அல்லது திருநங்கை என்கிற உண்மை நிலையை மறைத்திட்டால் பாதுகாப்பாக இருக்கலாம் என்று உள்துறை அலுவலகம் வாதாடுவதை மேலும் கடினமானதாக ஆக்குகிறது.

20 மே 2010 அன்று வெளியான, தற்போதைய யு.கே. அரசாங்கத்தின் முழுமையான கூட்டு ஒப்பந்தம், கீழ்க்காணும் கூற்றை உள்ளடக்குகிறது:

*'அவர்களது பாலியல் முறை அல்லது பாலின அடையாளம் காரணமாக சிறைத்தண்டனை, சித்திரவதை அல்லது தூக்குத்தண்டனை ஆகிய நீரூபிக்கப்பட்ட அபாயங்களில் கொண்டு நிறுத்துகிற காரணத்தால், குறிப்பிட்ட நாடுகளைவிட்டு வெளியேற வேண்டிய அவசியமுள்ள புகலிடம் கோருவோரை நாட்டை விட்டு வெளியேற்றுவதை நாங்கள் நிறுத்திடுவோம்."*

**நான் ஒரு தன்பால் உடலுறவுடைப் பெண் (லெஸ்பியன்), ஓரினச் சேர்க்கையாளர், இருபாலினத்தவர் அல்லது திருநங்கையாக (LGBT) இருந்து எனது நாட்டில் எனது பாலியல் முறை அல்லது பாலின அடையாளம் காரணமாக துன்புறுத்தலை அனுபவித்திருந்தால் என்ன செய்ய வேண்டும்?**

நீங்கள் உங்களுடைய பாலியல் முறை அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் துன்புறுத்தலை அனுபவித்திருந்தால், நீங்கள் செய்ய வேண்டியது:

- உள்துறை அலுவலகத்திடம் **வாய்ப்பு கிடைக்கும் போது உடனடியாக** சொல்லிவிட வேண்டும். இது கடினமானதாக இருந்தாலும், நீங்கள் அவர்களிடம் சொல்லாமல் இருந்தால், உங்களது நம்பகத்தன்மை கேள்விக்குரியாகலாம். மேலும் இது உங்களுடைய புகலிடக் கோரிக்கையின் வெற்றியை கடுமையாக பாதிக்கச் செய்யலாம்.

- இதை எங்களுடைய நேர்வுப்பணியாளர்களில் ஒருவர், மற்றொரு அகதி நிறுவனத்திலுள்ள ஆலோசகர் ஒருவர் அல்லது உங்களுடைய சட்டப்பிரதிநிதி போன்ற நம்பகமான ஒரு ஆலோசகருடன் பகிர்ந்துகொள்ளுங்கள், உங்களுடைய ஆலோசகர் உதவுவதற்காகவே இருக்கிறார் மற்றும் அவர்களிடம் சொல்வது அனைத்தும் நம்பகமானவையே. அவர்கள் உங்களுக்கு உதவக் கூடிய மற்ற தொழில் நெறிஞர்களையும் அடையாளம காட்டுவர்.
- தன்பால் உடலுறவுடைப் பெண் (லெஸ்பியன்), ஓரினச் சேர்க்கையாளர், இருபாலினத்தவர் அல்லது திருநங்கையர் (LGBT) ஆகியோரைப் பற்றிய நன்கு அறிந்த ஒரு சட்டப்பிரதிநிதியைக் கண்டுபிடியுங்கள் அல்லது தேர்ந்தெடுங்கள். அவர்கள் இந்த விஷயத்தில் அனுபவமற்றவர்கள் என்றால், மேலே கோடிட்ட தீர்ப்புவழிச் சட்டத்தை அறிந்தவரா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**எனக்கு யார் உதவக்கூடும்?**

**அகதிகள் முகமைகள் மற்றும் தன்னார்வப் பிரிவுக் குழுக்கள்**

ஸ்காட்லாந்து அகதி மன்றம், மற்றும் பிற தன்னார்வப் பிரிவுக் குழுக்கள் போன்ற அகதிகள் முகமைகள், - தன்பால் உடலுறவுடைப் பெண் (லெஸ்பியன்), ஓரினச் சேர்க்கையாளர், இருபாலினத்தவர் அல்லது திருநங்கையர் (LGBT) அமைப்புகள் உள்ளிட்டவை - உங்களுக்குத் தேவையான தகவல்களையும் ஆதரவையும் நீங்கள் கண்டறிய உதவக் கூடும். இது சட்ட, ஆரோக்கிய, அல்லது சமூகக் குழுக்களை நீங்கள் அணுக உதவுவதை உள்ளடக்கலாம். நீங்கள் பாரபட்சம் அல்லது வேற்றுமையால் துன்புற்றால் கூட, உதாரணமாக, உங்களின் தங்குமிடத்திலோ வீட்டுக்குடியிருப்பிலோ, இவை உங்களுக்கு உதவக் கூடும்.

இம்முகமைகள் மற்றும் குழுக்கள் உங்களது அந்தரங்கத்தை மதிப்பவையாகும். நீங்கள் அவர்களிடம் ஒத்துக் கொண்டாலேயொழிய எவரிடமும் உங்களது விவரங்கள் கலந்துரையாடப்பட மாட்டாது. நீங்கள் யாருடனாவது தொலைபேசியில் பேசுவதில் அதிக சௌகரியமாக உணர்ந்தால், தொலைபேசி உரைபெயர்ப்புச் சேவையையும் நீங்கள் கோரலாம்.

இதர பயனுள்ள இணையதளங்களின் பட்டியல் :

**Equality Network**
சமத்துவ வலையமைப்பு

www.equality-network.org/Equality/website.nsf/home?OpenForm

**LGBT Youth Scotland**
**LGBT** யூத் ஸ்காட்லாந்து

www.lgbtyouth.org.uk

**Stonewall Scotland**
ஸ்டோன்வால் ஸ்காட்லாந்து

www.stonewall.org.uk/scotland

**Scottish Transgender Alliance**

**ஸ்காட்டிஸ் டிரான்ஸ்ஜென்டர் அலையன்ஸ்**

http://www.scottishtrans.org/

**UK Lesbian and Gay Immigration Group**
**யு.கே- தன்பால் உடலுறவுடைப்பெண்கள் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர் குடிநுழைவுக் குழு**

32-36 Loman Street, London, SE1 0EH

தொலைபேசி: 0207 922 7811

http://www.uklgig.org.uk/asylum.htm

**தொல்லைகொடுப்பதை தெரிவித்தல்**

தன்பால் உடலுறவுடைப் பெண், ஓரினச் சேர்க்கையாளர், இருபாலினத்தவர் அல்லது திருநங்கையர் (LGBT) ஆகியோருக்கு ஆதரவளிப்பதில் காவல்துறையும் மிகவும் உதவிகரமாக உள்ளது. அவர்களது LGBT இணைப்பு அலுவலருடன் நீங்கள் தொடர்பு கொள்ள விழையலாம்.

உங்களால் காவல்துறையிடம் நேரடியாகப் பேச இயலாவிட்டாலோ அல்லது உங்களுக்கு விருப்பமில்லாவிட்டாலோ நீங்கள் தெரியப்படுத்துவதற்கு, நம்பகத்திற்குரிய ரகசியமான மூன்றாவது நபர் திட்டத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இது ஸ்காட்லாந்து அகதிகள் மன்றம் (0800 085 6087) போன்ற முகமை ஒன்றிலுள்ள பயிற்சி பெற்ற தன்னார்வலர் ஒருவரிடம் நீங்கள் தெரிவிக்க அனுமதிக்கிறது. அந்நபர் நீங்கள் அளிக்கின்ற அனைத்து விவரங்களையும் பெற்றுக் கொள்வார். பிறகு நீங்கள் காவல்துறை விசாரணை செய்வதற்கு விரும்புகிறீர்களா என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.